தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர்,
பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்
சென்னை –600006.

நக. எண். : ACE/34/ ஆ3 / கலை / ஒபக / 2023, நாள்: 21 .02.2024

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – கல்வி சாரா செயல்பாடுகள் – அரசு பள்ளிகளில் தொடக்க நிலையில் "பண்பாடு மற்றும் விளையாட்டு வாரம் 2023–24 நடத்துதல் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை : மத்திய திட்ட ஒப்புதல் குழுக் கூட்ட குறிப்புகள் F.No.10-1/2-23-IS.10, GoI, MoE, Department of School Education & Literacy, Is,10 section, New delhi, Dated: 23.02.2023.

************

அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் "மாணவர்களின் கலை மற்றும் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரும் விதமாக இவ்வாண்டு 2023–24இல் முதன் முதன்முதலாக **பண்பாடு மற்றும் விளையாட்டு வாரம்** (Cultural & Sports week) கொண்டாடப்படவுள்ளது. இச்செயல்பாடுகளில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**அ. பண்பாடு மற்றும் விளையாட்டு வாரம்**

அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பயிலும் **1 முதல் 5 வகுப்பு மாணவர்களுக்கு** பின்வரும் அட்டவணையின்படி கலாச்சார மற்றும் விளையாட்டு வாரம் சார்ந்த போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

| வ.எண் | நிலை | கால அளவு |
|---|---|---|
| 1. | பள்ளி அளவிலான போட்டிகள் | 27.02.2024, 28.02.2024, 29.02.2024 |
| 2. | வட்டார அளவில் மதிபிடுதல் | 05.03.2024, 06.03.2024, 07.03.2024 |
| 3. | மாவட்ட அளவில் மதிப்பிடுதல் | 12.03.2024, 13.03.2024 |
| 4. | மாநில அளவில் மதிப்பிடுதல் | 19.03.2024, 20.03.2024 |

ஆ. இதற்கென கீழ்காணும் போட்டிகள், வேடிக்கை விளையாட்டு மற்றும் செயல்பாடுகள் மேற்காண் பள்ளிகளில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண் | செயல்பாடுகள் | தலைப்பு | கால அளவு | தனி/ குழு |
|---|---|---|---|---|
| 1 | **வரைதல் மற்றும் வண்ணம் தீட்டுதல்** | 1. தமிழ்நாட்டின் பாரம்பரிய விழாக்கள்<br>2. விலங்குகள் மற்றும் வனவிலங்குகள்<br>3. என் கனவு பள்ளி<br>4. தமிழ்நாட்டின் வரலாற்றுச் சின்னங்கள்<br>5. இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் | 60 நிமிடம் | தனி |
| 2 | **கதை சொல்லுதல்** | 1. நட்பு<br>2. எனக்குப் பிடித்த விசித்திரக் கதை<br>3. ஒரு மாயாஜால இடத்திற்கு வருகை<br>4. பகிர்வின் முக்கியத்துவம்<br>5. ஒரு சிறந்த உலகத்திற்கான எனது கனவு | 4 நிமிடம் | தனி |
| 3 | **மாறுவேடப் போட்டி** | 1. அழிந்து வரும் விலங்குகள்<br>2..தமிழ்நாட்டின் வரலாற்று தலைவர்கள்<br>3.சமூக உதவியாளர்கள் (மருத்துவர், காவல்துறை அதிகாரி, விவசாயி போன்றோர்)<br>4.பாரம்பரிய நடனக் கலைஞர்கள் அல்லது இசைக்கலைஞர்கள் | 3 நிமிடம் | தனி |
| 4 | **கைவினை பொருட்கள் செய்தல்** | 1. உள்ளூர் விலங்குகள் அல்லது பறவைகளின் களிமண் மாடல்<br>2.பனை ஓலை அல்லது மூங்கில் கைவினை போன்ற பாரம்பரிய கைவினைப் பொருட்களை உருவாக்குதல்<br>3.மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி சுற்றுச்சூழல் நட்பு கைவினை<br>4.பாரம்பரிய பொம்மைகள்<br>5.காகித கைவினை | 120 நிமிடம் | தனி |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | பாரம்பரிய நடனம் | 1. கிராமிய நடனம்<br>2. செவ்வியல் நடனம் | 4 நிமிடம் | 8 மாணவர்கள் கொண்ட குழு |
| 6 | **கருவி இசை இசைத்தல்** | தோல் கருவி/ கம்பிக் கருவி/ காற்றுக் கருவி | 4 நிமிடம் | தனி |
| 7 | **பாட்டுப் போட்டி** | பாரதியார் பாடல்கள்/ தேசிய ஒற்றுமை பாடல்கள் | 4 நிமிடம் | தனி |
| 8 | **கண்காட்சி** | பாரம்பரிய விளையாட்டு பொருட்கள் மற்றும் அறிவியல் செயல்திட்டம். **(குறிப்பு: மாணவர்களின் படைப்புகள் மட்டுமே காட்சிப்படுத்திடல் வேண்டும்.)** | 3 நிமிடம் | தனி |
| 9 | **பேச்சுப் போட்டி** | 1. எங்கள் ஊர் திருவிழா<br>2. எனக்கு பிடித்த விளையாட்டு | 3 நிமிடம் | தனி |
| 10 | **நாட்டிய நாடகம்** | 1. விளையாட்டுகள்<br>2.சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம்<br>***(குறிப்பு: மாணவர்கள் பின்புலத்தில் ஒலிக்கும் நாட்டிய நாடக பாடலுடன் பாடி நடித்தல் வேண்டும். )*** | 4 நிமிடம் | 8 மாணவர்கள் கொண்ட குழு |
| 11 | **பலகுரல் (Mimicry)** | குறிப்பு:பிறரைப் புண்படுத்தும் படியாகவோ, கேலி செய்வது போலவோ இருத்தல் கூடாது. | 4 நிமிடம் | தனி |

இந்த தலைப்புகள் மாணவர்களிடையே படைப்பாற்றல் மற்றும் கற்பனையை ஊக்குவிக்கும் மற்றும் கலாச்சாரம், வரலாறு மற்றும் சமூக மதிப்புகளையும் பல்வேறு அம்சங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றன.

**இ. போட்டிகள் நடத்துதல் சார்ந்த வழிகாட்டுதல்கள்**

பண்பாடு மற்றும் விளையாட்டு வாரம் சார்ந்த போட்டிகள் பள்ளி, வட்டாரம் மற்றும் மாநில அளவில் நடத்துதல் சார்ந்து பின்வரும் வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகிறது.

**(I) பள்ளி அளவிலான போட்டிகள்**

- முதலில் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களின் விவரங்கள் EMIS தளத்தில் போட்டிகள் தொடங்குவதற்கு முன்பு பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
- மேற்காண் போட்டிகள் அனைத்தும் பள்ளி அளவில் முதலில் நடத்தப்படவேண்டும்.

- ஒவ்வொரு தனி போட்டிகளுக்கு ஒரு வெற்றியாளரை தெரிவு செய்தல் வேண்டும். அது போல குழு போட்டிக்கும் அவ்வாறே ஒரு குழுவினரை தெரிவு செய்தல் வேண்டும்.
- **வரைந்து வண்ணம் தீட்டுதல்** மற்றும் **கண்காட்சி** போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவரின் படைப்புகளை சார்ந்த மாவட்ட வட்டார வள மையத்தில் நேரிடையாக சென்று போட்டி நிறைவடைந்த அடுத்த நாளே ஒப்படைத்தல் வேண்டும். முன்னதாக **மாணவரது படைப்பினை போட்டி நிறைவடைந்தவுடன் high resolution புகைபடம் எடுத்து அப்புகைப்படத்தினை வட்டார வளமைய மேற்பார்வையாளரிடமிருந்து பெறப்படும் GOOGLE படிவம் மூலம் சார்ந்த வட்டார வளமையத்திற்கு** போட்டிகள் நிறைவுற்றவுடன் போட்டிகளில் கலந்து கொள்ளும் பள்ளிகள் அனுப்புதல் வேண்டும்.
- **கதை சொல்லுதல், பாரம்பரிய உடை அணிதல், பாரம்பரிய நடனம், இசைக் கருவி இசைத்தல், பாட்டுப் போட்டி மற்றும் நாட்டிய நாடகம்** ஆகியவற்றில் வெற்றி பெற்ற தனி மாணவர் அல்லது குழுவினரின் சார்ந்த செயல்பாடுகளை வீடியோ எடுத்து வட்டார வளமைய **GOOGLE படிவம் மூலம் சார்ந்த வட்டார வளமையத்திற்கு** போட்டிகளில் கலந்து கொள்ளும் பள்ளிகள் அனுப்புதல் வேண்டும்.
- போட்டிகள் நடைபெறும் வகுப்பறைகளில் உள்ள கருப்பலகையில் கீழ்காணும் விவரங்கள் கண்டிப்பாக எழுதப்பட வேண்டும். இவ்விவரங்கள் மாணவர்கள் வீடியோவில் பின் புலத்தில் காணப்பட வேண்டும்.

பண்பாடு மற்றும் விளையாட்டு வாரம் 2023–24

(Cultural and Sports Week )

**பள்ளியின் பெயர்:** **மாவட்டம்:**

**UDISE CODE :** **ஒன்றியம்:**

- மாணவர் படைப்புகளை எடிட் (edit) செய்து அனுப்புதல் கூடாது
- எடிட் செய்த வீடியோக்கள் போட்டியிலிருந்து நிராகரிக்கப்படும்.
- ஒலியமைப்பை ஒரு முறை பரிசோதித்த பின்னர் படப்பதிவு செய்யப்பட வேண்டும்.
- படப்பதிவு செய்கையில் கைகளை அசைக்காமல் நேராக வைத்து எடுக்கவும்.
- Google Form வாயிலாக அனுப்பும் காணொலியில் எடிட் செய்ய கூடாது. ஒரு மாணவர் பாடுகிறார் என்றால் பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை ஒரே ஷாட்டில் (shot) இருக்க வேண்டும்.
- ஒளியமைப்பு அவர்களுடைய முகத்தில்படுமாறு எடுக்க வேண்டும் அவர்களின் தலைக்கு பின்னால் இருந்து வெளிச்சம் வருவது போல் எடுக்க வேண்டாம்.

- மாணவரின் பின்னால் ஒரே நிறத்தில் பின்னனி (background) இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ஒரே ஒரு மாணவர் பங்கேற்கும் நிகழ்வு எனில் போர்ட்ரைட்டில் (Portrait) அலைபேசியை வைத்து படப்பதிவு செய்யலாம். குழுவாக மாணவர்கள் பங்கேற்கும் போட்டி எனில் லேண்ட்ஸ்கேப்பில் (landscape) வைத்து படப்பதிவு செய்யலாம்.
- குறித்த கால வரையறைக்குள் மாணவர்கள் தங்கள் போட்டிகளுக்கான நிகழ்ச்சிகளை தயாரித்தல் வேண்டும். இதனை பள்ளி ஆசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்,
- வெற்றி பெற்ற மாணவர்களின் வீடியோவினை போட்டிகள் நிறைவடைந்தவுடன் 29.02.2024 அன்று மாலை 5 மணிக்குள் சார்ந்த வட்டார வளமையங்களுக்கு GOOGLE form வாயிலாக அனுப்புதல் வேண்டும்.
- இப்போட்டிகளை பள்ளிகளில் மேற்காண் அட்டவணையில் கூறியுள்ள நாட்களில் மட்டுமே நடத்திடல் வேண்டும்.

(II) <u>வட்டார அளவிலான போட்டிகள்</u>

- முன்னதாக அனைத்து வட்டார வளமையங்களிலும் இணைப்பில் உள்ள விவரங்கள் கொண்ட GOOGLE படிவம் உருவாக்கி அனைத்து போட்டிகள் தொடங்கும் நாளுக்கு ஒருநாள் முன்னதாக மின்னஞ்சலில் அனைத்து அரசு வகுப்பு 1 முதல் 5 வரையுள்ள பள்ளிகளுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- அதன் மூலம் பள்ளி அளவில் வெற்றி பெற்ற மாணவர்களின் படைப்புகள் புகைப்படம் மற்றும் வீடியோ மூலம் பெறுதல் வேண்டும்.
- பின்னர் அரசு பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேர ஆசிரியர்கள் (Art Education) இசை ஆசிரியர்கள், நாட்டிய ஆசிரியர்கள் என தகுதியுள்ள அரசு பள்ளி ஆசிரியர்களை ஒரு போட்டிக்கு 3 நடுவர்களை நியமித்து Smart TV/ Projector உதவியுடன் அனைத்து வெற்றி பெற்ற மாணவர்களின் படைப்புகளையும் கீழ்காணும் இனங்களில் உள்ளவாறு மதிப்பீடு செய்தல் வேண்டும்.
- இவ்வாறு மதிப்பீடு செய்து 10 போட்டிகளுக்கான வெற்றியாளர்களை தெரிவு செய்து EMIS தளத்தில் பதிவு செய்தல் வேண்டும்.
- அவ்வாறு வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்களின் படைப்புகளை சார்ந்த மாவட்ட ஒருங்கிணைப்பாளரிடமிருந்து பெறப்படும் GOOGLE படிவத்தில் பதிவேற்றம் செய்து அனுப்புதல் வேண்டும்.
- நடுவர்களின் மதிப்பீட்டு படிவங்கள் சார்ந்த ஒன்றியங்களில் பராமரித்தல் வேண்டும்.

(III) மாவட்ட அளவிலான போட்டிகள்

- அவ்வாறு மாவட்ட அளவில் பெறப்படும் அனைத்து ஒன்றிய வெற்றியாளர்களின் படைப்புகளை மாவட்ட அளவில் நடுவர்களாக வல்லுநர்களை நியமித்து மதிப்பீடு செய்து வெற்றி பெற்ற மாணவர்கள் விவரங்களை EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். மேலும் மாநில இயக்ககத்திலிருந்து பெறப்படும் GOOGLE படிவம் வாயிலாக அனைத்து மாவட்டங்களில் வெற்றி பெற்ற மாணவர்கள் படைப்புகளை பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

(IV) போட்டிகளை மதிப்பீடு செய்வதற்கான விதிமுறைகள்

1. வரைந்து வண்ணம் தீட்டுதல்

| | |
|---|---|
| வரைவின் நேர்த்தி | 20 மதிப்பெண் |
| சீரான வண்ணப்பூச்சு | 20 மதிப்பெண் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 20 மதிப்பெண் |
| பொருள் சார்ந்த வண்ணம் | 20 மதிப்பெண் |
| ஒளியும் நிழலும் | 20 மதிப்பெண் |

2. கதை சொல்லுதல்

| | |
|---|---|
| உச்சரிப்பு | 20 மதிப்பெண் |
| தெளிவான குரலுடன் கதையை வழங்குதல் | 20 மதிப்பெண் |
| முக பாவனைகள், உடல்மொழி | 20 மதிப்பெண் |
| கருத்துச்செறிவு | 20 மதிப்பெண் |
| எடுப்பு, தொடுப்பு, முடிப்பு | 20 மதிப்பெண் |

3. மாறுவேடப் போட்டி

| | |
|---|---|
| படைப்பாற்றல் மற்றும் அசல் தன்மை | 20 மதிப்பெண் |
| ஆடை வடிவமைப்பு தலைப்புடன் ஒத்துபோதல் | 20 மதிப்பெண் |
| கருப்பொருளை பின்பற்றுதல் | 20 மதிப்பெண |
| தன்னம்பிக்கை | 20 மதிப்பெண் |
| நடிப்பு & உடல்மொழி | 20 மதிப்பெண் |

4. கைவினை பொருட்கள் செய்தல்:

| | |
|---|---|
| படைப்பாற்றல் மற்றும் அசல் தன்மை | 25 மதிப்பெண் |
| திறன் மற்றும் நுட்பம் | 25 மதிப்பெண் |

| | |
|---|---|
| பொருட்களின் பயன்பாடு | 25 மதிப்பெண் |
| விளக்கம் | 25 மதிப்பெண் |

5. பரம்பரிய நடனம் – கிராமிய நடனம்

| | |
|---|---|
| பக்கவாத்தியங்கள் – பாரம்பரிய இசைக்கருவிகளுடன் | 20 மதிப்பெண் |
| வகைமைக்கு ஏற்ற ஆட்ட அடவுகள் | 20 மதிப்பெண் |
| ஒப்பனை மற்றும் உமையலங்காரம் | 20 மதிப்பெண் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண் |
| தாளம் | 20 மதிப்பெண் |

செவ்வியல் நடனம்:

| | |
|---|---|
| தாளம் | 20 மதிப்பெண் |
| பாவம் | 20 மதிப்பெண் |
| அங்க சுத்தம் | 20 மதிப்பெண் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண் |

6. கருவி இசை இசைத்தல் : (Percussion type)
(தோல் கருவிகள்) தாளக் கருவிகள்

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| லயம் | 25 மதிப்பெண் |
| இசைக்கும் தன்மை | 25 மதிப்பெண் |
| பாட்டுக்கு வாசிக்கும் முறை (Presntation) | 25 மதிப்பெண் |

கருவி இசை (தந்தி இசைக் கருவி):

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| லயம் | 25 மதிப்பெண் |
| பாவம் | 25 மதிப்பெண் |
| கற்பனை சுரம் | 25 மதிப்பெண் |

கருவி இசை (காற்றிசைக் கருவி):

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| லயம் | 25 மதிப்பெண் |
| பாவம் | 25 மதிப்பெண் |
| கற்பனை சுரம் | 25 மதிப்பெண் |

7. பாட்டு போட்டி

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| தாளம் | 25 மதிப்பெண் |
| ஒலிப்புமுறை மற்றும் கருத்து | 25 மதிப்பெண் |
| பாவம் (மெய்ப்பாடு) | 25 மதிப்பெண் |

8. பாரம்பரிய விளையாட்டு பொருட்கள் / அறிவியல் செயல் திட்டம் கண்காட்சி

| | |
|---|---|
| படைப்பாற்றல் | 25 மதிப்பெண் |
| விளக்கமளித்தல் | 25 மதிப்பெண் |
| கருப்பொருளின் தெளிவு | 25 மதிப்பெண் |
| பொருட்களின் பயன்பாடு | 25 மதிப்பெண் |
| | |

9. பேச்சுப் போட்டி:

| | |
|---|---|
| மேடையில் அச்சமின்றிப் பேசும் திறமை | 20 மதிப்பெண் |
| ஒலிப்பு முறை | 20 மதிப்பெண் |
| மொழித் தூய்மை | 15 மதிப்பெண் |
| உரைத் தெளிவு | 15 மதிப்பெண் |
| பேச்சின் தொடரோட்டம் (Continuity) | 15 மதிப்பெண் |
| குரல் ஏற்ற இறக்கம் | 15 மதிப்பெண் |

10. நாட்டிய நாடகம்

| | |
|---|---|
| ஆடுபவர்களின் ஒத்திசைவு | 20 மதிப்பெண் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண் |
| வகைமைக்கு ஏற்ற அடவுகள் | 20 மதிப்பெண் |
| பக்க வாத்தியங்கள் பாரம்பரிய இசைக்கருவிகள் | 10 மதிப்பெண் |
| நீதி | 10 மதிப்பெண் |

11. பலகுரல் (Mimicry)

| | |
|---|---|
| கருத்து | 25 மதிப்பெண் |
| போலச் செய்தல் திறன் (Mimicry) | 25 மதிப்பெண் |
| உடல் மொழி | 25 மதிப்பெண் |
| குரல் வளம் | 25 மதிப்பெண் |

(IV) <u>பிற வழிக்காட்டுதல்கள்</u>

- எடிட் செய்த வீடியோக்கள் போட்டியிலிருந்து நிராகரிக்கப்படும்.
- குறித்த கால வரையறைக்குள் மாணவர்கள் தங்கள் போட்டிகளுக்கான நிகழ்ச்சிகளை தயாரித்தல் வேண்டும். இதனை பள்ளி ஆசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்,
- வெற்றி பெற்ற மாணவர்களின் வீடியோவினை போட்டிகள் நிறைவடந்தவுடன் 29.02.2024 அன்று மாலை 5 மணிக்குள் சார்ந்த வட்டார வளமையங்களுக்கு GOOGLE form வாயிலாக அனுப்புதல் வேண்டும்.
- அனைத்து நிலையிலும் நடுவர்கள் விவரம் ரகசியமாக வைத்தல் வேண்டும்.
- நடுவர்கள் மதிப்பீடு மேற்கொள்ளும் முன்னர் கீழ்காணும் குழுக்கள் வட்டார மற்றும் மாவட்ட அளவில் அமைத்தல் வேண்டும்.

  <u>வட்டார அளவிலான குழு உறுப்பினர்கள்</u>

  1. வட்டார கல்வி அலுவலர் –1
  2. வட்டார வளமைய மேற்பார்வையாளர்–1
  3. அரசு நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் –1
  4. அரசு தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் –1
  5. ஆசிரியர் பயிற்றுநர்–1

  <u>மாவட்ட அளவிலான குழு உறுப்பினர்கள்</u>

  1. உதவி திட்ட ஒருங்கிணைப்பாளர் –1 (SS)
  2. மாவட்ட கல்வி அலுவலர் –1
  3. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் –1 (Art & Culture)
  4. மேற்பார்வையாளர் –1
  5. ஆசிரியர் பயிற்றுநர் –1

- நடுவர்கள் மாணவர்களின் ஒவ்வொரு நிகழ்ச்சியின் வீடியோக்களை முழுவதுமாக பார்த்த பின்னர் மட்டுமே மதிப்பீடு செய்தல் வேண்டும்.
- நடுவர்கள் நிகழ்ச்சி மதிப்பீட்டின் போது தொலைபேசியில் பேசுதல் கூடாது.
- நடுவர்கள் மதிப்பீட்டினை **மேற்காண் குழுக்கள் முன்னிலையில் மட்டுமே** மதிப்பீடு செய்தல் வேண்டும்.
- ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும்.
- போட்டிகள் நடத்துதல் சார்ந்து உரிய நிதி ஒதுக்கீடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக விடுவிக்கப்படும்.

(V) <u>மாநில அளவிலான போட்டிகள்</u>

மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்படும். மாணவர்களை போட்டிகளில் கலந்து கொள்ள செய்து வெற்றி பெற செய்யும் சார்ந்த பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஒன்றிய ஆசிரிய பயிற்றுநருக்கு (Art &Culture) பரிசுகள் வழங்கப்படும்.

(VI) இப்போட்டிகள் மாணவர்களை பள்ளி அளவில் போட்டிகளில் கலந்து கொள்ள செய்து அப்போட்டிகளை வீடியோ மூலம் ஒன்றிய மற்றும் மாவட்ட அளவில் மதிப்பீடு செய்தல் முதன் முறையாக மேற்கொள்ளப்படுவதால் இப்போட்டிகளை குறித்த காலத்திற்குள் மேற்காண் வழிமுறைகளை பின்பற்றி நடத்தி முடிக்கும் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்(Art&Culture)களுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

எனவே அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் மேற்காண் வழிமுறைகளை பின்பற்றி கலாச்சார மற்றும் விளையாட்டு வாரம் சார்ந்த போட்டிகளை அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு நடத்தி அதன் மூலம் மாணவர்கள் தனியாகவும் குழுவாகவும் போட்டிகளில் பங்கேற்க செய்து அவர்களது உள்ளாந்த திறமையினை வெளிப்படுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்
தொடக்க கல்வி

இயக்குநர்
பள்ளிக் கல்வி

மாநில திட்ட இயக்குநர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி